21 06 2024 **FRIDAY** 6 30 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மனிதகுலம் முழுமைக்கும் நன்மை அளிக்கக்கூடியதாக யோகா திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

2. தமிழகத்தில் கள்ளச்சாராயத்தை ஒழிக்க திமுக அரசு தவறிவிட்டதாக மத்திய இணையமைச்சர் திரு. எல்.முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

3. தமிழகத்தில் புதிதாக 10 தடுப்பணைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும் என்று நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அறிவித்துள்ளார்.

4. பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி வழங்கப்படும் என்று மாநில அரசு கூறியுள்ளது.

5. Slovakia சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>><<<<

மனிதகுலம் முழுமைக்கும் நன்மை அளிக்கக்கூடியதாக யோகா திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்..

சர்வதேச யோகா தின கொண்டாட்டங்களை இன்று ஸ்ரீநகரில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இந்நாளையொட்டி நாடுமுழுவதும் நடைபெற்ற யோகா தின கொண்டாட்டங்களில் மத்திய அமைச்சர்கள், ஆளுநர்கள் மற்றும் பிஜேபி உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

வெளிநாடுகளிலும் இந்திய தூதரகங்கள் சார்பில் யோகா தின கொண்டாட்டங்கள் சிறப்பாக நடைபெற்றன.

>>>><<<<

தமிழகத்தில் கள்ளச்சாராயத்தை ஒழிக்க திமுக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல்.முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று மேட்டுப்பாளையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இந்த சம்பவத்திற்கு காரணமானவர்கள் மீது, கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். கள்ளக்குறிச்சி சம்பவத்திற்கு பொறுப்பேற்று, சம்பந்தப்பட்ட துறை அமைச்சர், தமது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்றும் திரு. எல். முருகன் வலியுறுத்தினார்.

>>>><<<<

தமிழக சட்டப்பேரவையில், கள்ளக்குறிச்சி சம்பவம் எதிரொலி காரணமாக, அஇதிமுக உறுப்பினர்கள், அவை காவலர்களால் வெளியேற்றப்பட்டனர். பிஜேபி மற்றும் பாமக உறுப்பினர்கள் வெளிநடப்பில் ஈடுபட்டனர்.

இன்று பேரவையில் கள்ளக்குறிச்சி சம்பவத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் கருப்புச்சட்டை அணிந்து வந்த அஇஅதிமுக உறுப்பினர்கள், கேள்வி நேரத்தை ஒத்தி வைத்து விட்டு, இதுகுறித்து விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

பேரவைத் தலைவர் இதற்கு அனுமதி மறுக்கவே, அவர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக, அவர்களை வெளியேற்றுமாறு பேரவைத் தலைவர் திரு. அப்பாவு அவைக் காவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, அவைக் காவலர்களால் அஇஅதிமுக உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டனர்.

பின்னர், கள்ளக்குறிச்சி சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பிஜேபி மற்றும் பாமக உறுப்பினர்கள் வெளிநடப்பில் ஈடுபட்டனர்.

>>>><<<<

தமிழகத்தின் 7 மாவட்டங்களில் உள்ள பத்து இடங்களில் தடுப்பணைகள் அமைக்கப்படும் என்று நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அறிவித்துள்ளார்.

இன்று பேரவையில் தமது துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அவர், 71 கோடி ரூபாய் செலவில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

கடலூர், சேலம், தஞ்சாவூர், திருப்பத்தூர், திருப்பூர், திருவண்ணாமலை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் இந்தப் பணிகள் நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தஞ்சாவூர், மதுரை உள்ளிட்ட 13 மாவட்டங்களில் பாசன அமைப்புகள் 116 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>><<<<

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி 25 லட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்று தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. சி.வி. கணேசன் கூறியுள்ளார்.

இன்று பேரவையில் தமது துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்க அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படும், அரசு தொழிற்பயிற்சி நிலைய விடுதிகளில் 92 லட்சம் ரூபாய் செலவில் நூலகங்கள் அமைக்கப்படும் போன்ற அறிவிப்புகளையும் அமைச்சர் வெளியிட்டார்.

>>>><<<<

தமிழகத்தில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ், தொற்றா நோய்களுக்கான சேவைகள் பயனாளிகளின் இல்லங்களுக்கே சென்று அளிக்கப்படுவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இன்று பேரவையில் இதனை தெரிவித்த அவர், இந்த திட்டத்தின் கீழ், புலம்பெயர்ந்த தொழிலாளர்களும் பயனடைந்திருப்பதாக குறிப்பிட்டார்.

476 தொழிற்சாலைகளில் இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு தொற்றா நோய்களுக்கான பரிசோதனை இந்த திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>><<<<

மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் நாளை தொடங்கி, வரும் செவ்வாய்க்கிழமை வரை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார். எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

>>>><<<<

மாவட்டச் செய்திகள்

நாமக்கல் மாவட்டத்தில் போதை ஒழிப்பு குறித்த ஆலோசனைக் கூட்டம் ஆட்சியர் திருமதி. உமா தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>><<<<

சேலம் மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் இன்று நடைபெற்றது.

>>>><<<<

திருச்சி மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை விற்பனை செய்பவர்கள் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் திரு. பிரதீப்குமார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

>>>><<<<

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூரில் நடைபெற்ற ஜமாபந்தி நிகழ்ச்சியில் 164 பேருக்கு வீட்டுமனைப் பட்டா உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. அருண்ராஜ் இன்று வழங்கினார்.

>>>><<<<

கரூர் அமராவதி ஆற்றில் தீயணைப்புத்துறை சார்பில், வெள்ளத்தில் சிக்கியவர்களை பாதுகாப்பாக மீட்பது தொடர்பான ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

>>>><<<<

ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலவலக வளாகத்தில் புதிய அங்காடி மையத்தினை ஆட்சியர் திருமதி. வளர்மதி இன்று திறந்து வைத்தார்.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

Slovakia சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

மகளிர் நீளம் தாண்டுதலில் Shaili Singh வெள்ளிப்பதக்கத்தையும், ஆடவர் Triple Jump பிரிவில் Endhose Paul வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

>>>><<<<

உலக கோப்பை வில்வித்தை போட்டியில், இந்தியாவின் Priyansh அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

துருக்கியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் அவர், 149-147 என்ற புள்ளிக்கணக்கில் சீனாவின் Akcaoglu-வை வென்றார்.

>>>>END<<<<